7th September 1960]

The remaining 450 caudidates will be given training before March 1961 in Primary Health Centres which will be selected soon.

Sri P. G. MANICKAM : ஒவ்வொரு ப்ரைமரி ஹெல்த் சென்டர்களிலும் தாய்களை நியமிக்கப்படுவது மிகவும் நல்லதாகையால் எல்லா சென்டர்களிலும் அவ்வாறு நியமிப்பதைப் பற்றி சர்க்கார் கவனம் செலுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU அவ்வித பயிற்சி கொடுப்பதற்கும் அப்படிப்பட்ட பயிற்சிக்கு வேண்டிய வசதியெல்லாம் எங்கெங்கே இருக்கிறதோ அந்தந்த இடங்களில் அப்படிக் கொடுப்பதுதான் முக்கியமான கொள்கை. இந்த 900 பேர்களுக்கு பயிற்சி கொடுக்க எந்த முறையில் நல்லதாகக் கொடுக்கமுடியுமோ அந்த வகையில் கொடுக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

Sri K. B. S. MANI : இப்படிப்பட்ட தாய்களுக்கு பயிற்சி கொடுக்க எங்கே தாய் பயிற்சி முகாம்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன ? அவர்கள் 'டெஸ்ட்' பாஸ் செய்திருக்கிறார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : எங்கேயெல்லாம் சுகாதார நிலையங்கள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

Motor-cycle

* 516 *Q.*—**Sri P. G. MANICKAM :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) அயல் நாடுகளுடைய உதவியோடு குறைந்த விலையில் மோட்டார் சைக்கிள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று சென்னை ராஜ்ஜியத்தில் ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

(ஆ) அப்படியாயின் அதன் விவரங்கள் யாவை ?

The Hon. Sri R. VENKATARAMAN : (அ) & (ஆ) The Enfield India, Limited, have a scheme for manufacturing in their existing factory at Tiruvothiyur annually 6,000 motor scooters and 9,600 two-stroke engines of low horse power which can be fitted to scooters and light-weight motor-cycles, with the technical collaboration of a company in the United Kingdom. The Government of India have granted a licence to the Enfield India Limited for this purpose under the Industries (Development and Regulation) Act, 1951.

Sri P. G. MANICKAM : இந்த தொழிற்சாலை எப்பொழுதிலிருந்து ஆரம்பமாகும் ?

The Hon. Sri R. VENKATARAMAN : இது நடந்துக்கொண்டிருக்கிறது. புதிதாக சில இனங்கள் கொடுத்திருக்கிறார்கள்.